# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.04.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4446/SCIC/2023**

திரு நாகராஜி ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 14.02.2022 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆலப்பட்டி உள்வட்டம் 81 அகரம் தரப்பு புலஎண்.169/3க்கான புலப்பட நகல், அ-பதிவேடு நகல், 1982ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரையுள்ள சிட்டா, அடங்கல் ஆகிய அனைத்து ஆவணங்களையும் பதிவேடுகளையும் நகல்களாக வழங்குமாறும், 1952ம் ஆண்டு பழைய அ-பதிவேட்டில் புலஎண்.169/3 என்ற நிலத்தின் புலஎண் நிலஉடைமை பதிவு மேம்பாட்டு திட்ட அ-பதிவேட்டில் புலஎண்.520ஆக எதன்

அடிப்படையில் அலுவலர்களால் மாற்றம் செய்யப்பட்டது என்பதற்கான விவரம் ஆகியவை குறித்து தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 10.03.2022 மற்றும் 04.04.2022 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 20.04.2022 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார் மேல்முறையீட்டு அலுவலரால் 15.11.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் சட்டப்பிரிவு 19 (3)-ன்கீழ் 13.03.2023 தேதியிட்டு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 4446/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலரால் 08.11.2024 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் தவறான தகவல்கள் தனக்கு வழங்கப்பட்டுள்ளதகாத் தெரிவித்து 03.01.2025 தேதியிட்டு ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.04.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளிக்காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற காணொளிக்காட்சி விசாரணையில் மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி ச. வசந்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. மனுதாரரால் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 14.02.2022 தேதியிட்டு அனுப்பிய மனுவில் சர்வே எண். 169/3க்கான FMB, அ-பதிவேடு, அடங்கல், சிட்டா ஆகியவற்றின் நகல்களையும், 1952ம் ஆண்டு பழைய அ-பதிவேட்டில் 169/3 எண்ணிலிருந்து நிலத்தின் புலஎண் நிலஉடைமை பதிவு மேம்பாட்டுத் திட்ட அ-பதிவேட்டில் 520 புலஎண்ணாக எதனடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்றும் அதற்கான ஆதார ஆவணங்களைக் கோரியுள்ள நிலையில். பொது அதிகார அமைப்பால் 10.03.2022 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய பதிலில் மனுதாரர் கோரும் சர்வே எண்ணிற்கான 1960ம் ஆண்டு அ-பதிவேடு, 1974ம் ஆண்டு FMB, SLR ஆகிய ஆவணங்கள் மட்டும் தங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும், அந்த ஆவணங்களைப் பெறுவதற்கான கட்டண விவரங்களையும், அவற்றை

செலுத்தவேண்டிய கணக்குத் தலைப்பு விவரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தொகையினை அரசுக் கணக்குத் தலைப்பில் செலுத்தியதற்கான செல்லானை மனுதாரர் சமர்ப்பித்த நிலையில், மேற்படி ஆவணங்கள் 04.04.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய புலஎண்.169/3 ஆனது நிலஉடைமை பதிவு மேம்பாட்டுத் திட்ட அ-பதிவேட்டில் 520ஆக மாற்றப்பட்டதற்கான ஆவணங்கள் சேலம் நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை அலுவலகத்தில் பராமரிக்கப்படும் என்றும், தனக்கு இரண்டு மாத காலஅவகாசம் அளிக்கும்பட்சத்தில் மேற்படி தகவல்களை அவ்வலுவலகத்திலிருந்து கோரிப்பெற்று மனுதாரருக்கு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

6. **எனவே, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தெரிவித்தவாறு இரண்டுமாத காலத்திற்குள் மனுதாரர் கோரிய சர்வே எண்.169/3 ஆனது நிலஉடைமை பதிவு மேம்பாட்டுத் திட்ட அ-பதிவேட்டில் 520ஆக மாற்றப்பட்டதற்கான ஆவணங்களை சேலம் நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை அலுவலகத்திலிருந்து பெற்று, அவற்றை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன், மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையையும் 12.06.2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4446/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.

<u>**மனுதாரர்:-**</u>
திரு நாகராஜி,
த/பெ புட்டன்,
இட்டிக்கல் அகரம் கிராமம் (ம) அஞ்சல்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 122

**நகல்,**
உதவி இயக்குநர்,
நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.

Copy to: File TK/PS